# WORD OF CHRIST




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 6. மே 1998. கனி 10

ஆசிரியர்

**B. அர்ஜுனன்**

# இயேசு கிறிஸ்துவில் நமது ஐக்கியம்

## Our Relationship in Jesus Christ

"இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" - வெளி. 7:14.

| இயேசு கிறிஸ்து | சபை | ஒரு கிறிஸ்தவன் |
|---|---|---|
| தலைவர்........................எபே. 1 : 22, 23 | சரீரம்..............................கொலோ. 1 : 18 | ஒரு அங்கத்தினன்....1 கொரி. 12 : 27 |
| இரட்சகர்..................1 யோவா. 4 : 14 | இரட்சிக்கப்பட்டது..........எபே. 5:23 | இரட்சிக்கப்பட்டவன்.. ரோம. 8 : 24 |
| மீட்பர்...................................தீத். 2 : 14 | மீட்கப்பட்டது............1 பேது. 1 : 18 | மீட்கப்பட்டவன்..............எபே. 1 : 7 |
| கழுவுகிறவர்........................எபே. 5 : 26 | கழுவப்பட்டது...........1 கொரி. 6 : 11 | கழுவப்பட்டவன்............வெளி. 1 : 5 |
| பரிசுத்தமாக்குபவர்......... எபே. 2 : 11 | பரிசுத்தமாக்கப்பட்டது..1 கொரி.1:2 | பரிசுத்தவான்..............................பிலி 1 : 1 |
| தேவனுடைய சுதந்தரர்.........ரோம. 8 ; 17 | கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரம்......ரோம. 8 : 17 | தேவனுக்கு சுதந்தரன்.........கலா. 3 : 29 |
| ராஜா...............................1. தீமோ. 6 ; 15 | ராஜ்யம்................................ எபி. 12 : 28 | நகரத்தான்..........................எபே. 2 : 19 |
| மேய்ப்பர்.................... யோவா. 10 : 11 | தொழுவம்....................யோவா. 10 ; 11 | மந்தை......................................அப். 20 : 28 |

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" - II கொரி. 5:17. - Dillard Thomas.

Published by

*THE WORLD ~~BIBLE~~ LITERATURE* PUBLICATIONS

*Post Box No. 5,*

*BATLAGUNDU - 624202.*

*S. India.*

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 | மே 1998 | கனி 10


ஆசிரியருரை:

## பாவி - Sinner



தேவனுடைய புத்தகமாகிய பரி. வேதாகமத்தில் வசனம் இப்படியாகச் சொல்லுகிறது. "பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்" பிர. 9:18. ஒருவன் தன்னை உண்டாக்கின தேவனுக்குப் பயப்படாமலும், அவருடைய வார்த்தையைக் கைக் கொள்ளாமலும் இருக்கும் போதும் அவன் தன் பாவத்தில் நிலைத்திருக்கிறான். அப்படி பாவத்தில் நிலைத்திருக்கிறவன் மிகுதியான நன்மையைக் கெடுப்பானேயல்லாமல் மிகுதியான நன்மையைக் கொடுக்க மாட்டான். ஆதி முதலாய் பாவஞ் செய்கிற பிசாசு தேவனுடைய பிள்ளைகளாகிய ஆதாமையும், ஏவாளையும் வஞ்சித்து தேவனுக்கு விரோதமாக அவர்களைப் பாவஞ் செய்யத் தூண்டியது. அவர்களோ அதற்கு பலியாகி பாவத்தின்கீழ் அடைக்கப்பட்டனர். "ஒரே மனுஷனுடைய கீழ்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல..." ரோம. 5:19 என்ற வசனத்தின்படி பாவம் எல்லோரையும் ஆண்டு கொண்டது.

சமீபத்தில் ஒரு மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். அங்கு வெறிநாய் கடித்த ஒரு நபருக்கு சிகிச்சை பார்த்துவிட்டு வந்த ஒரு நர்சும், மற்றவரும் இப்படியாக பேசிக்கொண்டனர். வெறி நாய் கடித்த நபர் எச்சில் ஒழுகவிட்டுக் கொண்டிருந்தார். எச்சில் பட்டதால் டாக்டர் தனக்கு தடுப்பூசி போட்டுக் கொண்டார். ஆகவே நாமும் தடுப்பூசி போட்டுக் கொள்வோம். இல்லையேல் நமக்கும் அது பாதிக்கும் என்றனர். பாருங்கள், கடிபட்ட நபருக்கு மட்டும் அந்த விஷம் பாதிக்க வில்லை. அந்த நபருக்கு வைத்தியம் செய்பவர்களுக்கும் அது பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. அதே போல்தான் ஆதாமின் மீறுதலால் பாவம் உலகத்தில் பிரவேசித்தது. எல்லோரும் பாவத்தின் கீழ் அடைபட்டோம். "நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிப்பவர்களா யிருப்போம் சத்தியம் நமக்குள் இராது" 1 யோ. 1:8.

மனிதன் பாவத்திற்கு அடிமைப்பட்டுவிட்டானே என்று தேவன் அவனைக் கைவிடவில்லை. எந்த மாமிசத்தில் இச்சித்து விழுந்து போனானோ அதே மாமிச சாயலாக தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பி அவர் மூலமாய் எல்லோரையும் இரட்சிக்கத் திட்டமிட்டார் "பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து

இவ்வுலகத்தில் வந்தார்" 1 தீமோ. 1:15. எல்லோரும் பாவிகளா? என்று அநேகர் கேட்கின்றனர். வேதம் சொல்லுகிறது, "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (பிசாசு) அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" II கொரி. 4:4. நம் நாட்டின் முக்கிய நகரங்களில் சாக்கடை ஆறுகளைப் பார்த்திருப்பீர்கள். அதிலே ஒருவன் விழுந்துவிட்டால் அவனை அப்பாழும் சாக்கடையிலிருந்து தூக்கியெடுத்துக் கழுவ இன்னொரு நபர் தேவை. அதே போல் எத்தனை பேர் விழுந்தாலும் அத்தனை பேரையும் தூக்கியெடுத்துக் கழுவ ஒரு நபர் தேவை. "எல்லாரும் வழிதப்பி, ஏகமாய் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கின்றவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" ரோம. 3:12. இப்படி கெட்டுப்போன ஜனங்களை இரட்சிக்க மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வந்தார்.

மனிதனை பாவத்திற்குக் கொண்டு செல்வது அவனுடைய இருதயத்திற்குள்ளே உண்டாகும் பொல்லாத சிந்தனைகளென்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். "விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் போன்ற பதிமூன்று பாவங்களும் அவன் உள்ளத்திலிருந்து அவனைத் தீட்டுப்படுத்தும். ஆகையால் தான் கற்பனையில் குறிப்பிடும் போது "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக" (மாற். 12:30) என்றார். இருதயத்தை தேவனுக்குக் கொடுக்கும்போது பாவம் செய்ய வழியில்லை. ஏனென்றால் தேவன் தம்மை விசுவாசிக்கிறவனுக்கு பரிசுத்த ஆவியான வரைக் கொடுத்திருக்கிறார். "அவர் வந்து, பாவத்தை குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" யோவா. 16:8. இன்றைய நாட்களில் நமக்கு இருக்கிற இந்த முழுமையான வேதம் முற்பிதாக்கள் மூலமாகவும் அப்போஸ்தலர் மூலமாகவும் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதை ஒருவன் விசுவாசித்து, கீழ்படிந்து ஏற்றுக் கொள்ளும்போது அவனை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார்.

"பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாகிறான்" 1 யோவா. 3:8. தேவனை ஒருவன் அரியாதிருக்கும் வரை அவன் ஒரு பாவிதான். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியால் பாவஞ்செய்யமாட்டான்" 1 யோவா. 3:9. கிறிஸ்தவர்களில் அநேகர் தவறு செய்கிறார்களே என்று சாடுகின்றனர். வசனம் தெளிவாகப் போதிக்கிறது. தேவனால் பிறந்தவன் பாவஞ் செய்யான். அதாவது ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்தவன். இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவன். அவருடைய சரீரமாகிய சபையில் அங்கம் வகிப்பவன். இவனையே "தேவனால் பிறந்தவன் என்று வேதம் போதிக்கிறது. மாமிசத்தினால் பிறப்பது மாமிசமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். அதினதின் கனிகளாலே அறியலாம்.

## இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. தேவனுடைய ஆலயம் சீலோவிலிருந்த கால முழுவதும் அவர்கள் யார் உண்டு பண்ணின சுரூபத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள்?
2. புருஷர் தொடங்கி ஸ்திரீகள் மட்டும் இஸ்ரவேலராகிய அனைவருக்கும் அவரவருக்கு ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித் துண்டையும், ஒவ்வொரு படி திராட்சை ரசத்தையும் பங்கிட்டுக் கொடுத்தவன் யார்?
3. தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் எதற்கு ஏதுவாயிருப்பான்?
4. இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றவன் யார்?
5. பவுலுடைய பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் யார்?
6. அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றி, எதினால் மேகத்தைச் சிதறப் பண்ணுகிறார்?
7. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு என்ன செய்கிறது?
8. எவர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின் மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்?
9. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், எப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்?
10. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ எதற்குள்ளாகத் தீர்க்கப்படுவான்?

சென்ற மார்ச் இதழின் Who Am I?ன் விடை: எலியா
1 இராஜா 17:1-3, 9; 19:2, 4-18; 16:29-33; 11 இராஜா 2:11

## பெண்கள் பகுதி

### வஸ்தி
### Vasthi

அன்பான சகோதரிகளே!

வஸ்தி என்பவள் ஒரு பட்டத்தரசி. இவளது புருஷன் நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட பேரரசன் அகாஸ்வேரு. உலகத்தில் இத்தனை செல்வ செழிப்பான நாடுகளையும் அரசாண்டு வந்த இவனுடைய வார்த்தை கோடிக்கணக்கான ஜனங்களின் சட்டமாக இருந்தது. ஆனால் வஸ்தியோ ராஜாவின் கட்டளையை மீறி, தன் ராஜ மேன்மையை இழந்தாள். காரணம்தான் என்ன? பார்ப்போம்.

ராஜா "...தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும், ஊழியக் காரருக்கும் விருந்து பண்ணினான்..." (எஸ். 1:3). "ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும்போது, மகாரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும், பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி ராஜகிரீடம் தரிக்கப் பட்டவளாக அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்து வரவேண்டுமென்று

கட்டளையிட்டான். ஆனாலும் பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்லியனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி வரமாட்டேன் என்றாள். அப்பொழுது ராஜாக் கடுங்கோபம் அடைந்து, தனக்குள்ளே மூர்க்க வெறி கொண்டான்" (எஸ். 1:10-12). பாருங்கள், ராஜ்யபாரம் முழுவதுமே இவனுக்குக் கீழ்படிந்திருக்கும் போது இந்த வஸ்தி எவ்வளவு துணிச்சலாக ராஜ கட்டளைக்குக் கீழ்படிய மறுத்துவிட்டாள். காரணம் தன் அழகை மற்றவர்களுக்கு காண்பிக்க விரும்பாததுதான் தன் ராஜ கிரீடத்தைக் காட்டிலும் தன் கற்பைப் பெரிதாக எண்ணி இவ்விதமாய் கட்டளையை மீற துணிகரம் கொண்டாள்.

வஸ்தி தேவனை அறிந்து கொண்டு வாழ்ந்த ஸ்திரீயாக வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. தேவனை அறியாத ஒரு அந்நிய ஸ்திரீயாக இருந்தபோதும் இவளிடம் காணப்பட்ட இந்த விசேஷித்த குணம் இன்றைய கிறிஸ்தவ சகோதரிகளுக்கு ஒரு சவால் என்றே கூறலாம். கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொள்கிற நாம் எப்படியிருக்கிறோம்? நாகரீகம் என்ற போர்வைக்குள் நம் நடை, உடை, பாவனை மற்றவர்களை இடறப் பண்ணுகிறதா? அல்லது ஆவிக்குரிய உன்னத ராஜ்யத்திற்குள் கொண்டு வந்து சேர்க்கிறதா? பவுல், எல்லாவற்றையும் அபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது என்று கூறுகிறார். ஆம், நாம் கிறிஸ்துவினுடையவர்களென்றால் தகுதியான நடை, தகுதியான வஸ்திரம், தகுதியான வார்த்தை போன்றவற்றையே தரித்துக்கொள்வோம். தேவனை அறியாத புற ஜாதிகளில் அநேகர் சன்மார்க்கமாக, அடக்கமுடையவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களது நீதியைப் பார்க்கிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என வேதம் கூறுவதைக் கவனிப்போம். "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" (1 பேது. 3:4).

அப்போஸ்தல பவுல் "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்படியுங்கள்" (கொலோ 3:18) என்று கூறுகிறார். புதிய உடன்படிக்கையின்கீழ் வாழ்கிற நாம் புருஷருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்படிவது அவசியமே. இருந்த போதிலும் அது கர்த்தருக்குப் பிரியமான காரியமா? என சிந்தித்து கர்த்தருக்கேற்கும்படி கீழ்படிய வேண்டும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பத்து குஷ்டரோகிகளைக் குறித்து குறிப்பிடும் போது சுகமாக்கப்பட்டவர்கள் பத்து பேரல்லவா! ஒரு அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணோம் என்றார். அதைப்போல இந்த வஸ்தி ஒரு அந்நிய ஸ்தரீயாக இருந்தபோதிலும் தன் கற்பைப் பெரிதாகப் பாவித்து பெண்ணின வர்க்கத்திற்கே இலக்கணமாகத் திகழ்கிறாள். நித்திய மணவாளனாகிய கிறிஸ்துவினுடையவர்களாகிய நாம் கிறிஸ்துவுக்கே பிரியமுண்டாக அவருக்கே கீழ்படிந்து, உலகத்துக்கு ஒத்த வேஷம் தரியாமல் கிறிஸ்துவையே தரித்துக்கொள்வோமாக! வஸ்தி தன் கற்பைக் காக்க இராஜ்யத்தையே இழந்தது போல நாமும் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றும் குப்பையுமாக எண்ணத் துணிவோமாக!

இதை வாசிக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே, நீ ஆதாமின் கீழ் இருக்கிறாயா? அல்லது கிறிஸ்துவின் கீழ் இருக்கிறாயா? ஆதாமின் கீழ் இருந்தால் உன் பாவங்கள் கழுவப்பட இன்றே உன்னை தேவனுக்கு அர்ப்பணித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள். கிறிஸ்துவின் கீழ் இருந்தால் அவர் ஒருவருக்கே கீழ்படிந்திரு. உன் இரட்சிப்பை முடிவு பரியந்தம் காத்துக்கொள். அப்பொழுது பாவம் உங்களை மேற்கொள்ளாது. பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளாக மாற கர்த்தர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத் தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே. எபி. 12:4.

## ஞானஸ்நானத்தின் நோக்கம்
## The Purpose of Baptism



ஞானஸ்நானம் (திருமுழுக்கு) ஒரு வேதாகமப் பாடம். அது மிக எளிமையான ஒன்று என சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பல வேலைகளில் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. பெரும்பாலான மக்கள் அதின் நோக்கத்தைப் புரிந்துகொள்வதில்லை. வார்த்தை நமக்கு எதைக் கற்பிக்கிறது?

முதலாவதாக, ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என்பதை நாம் புரிந்துகொள்வோம் (எபேசியர். 4:5). யோவானின் திருமுழுக்கு, துன்பத்தின் திருமுழுக்குப் போன்ற வேறு திருமுழுக்குகளும் இருந்திருக்கின்றன. ஆனால் பவுல் கி. பி. 64ஆம் ஆண்டில் இந்த அறிவிப்பை விடுத்த வேளையிலிருந்து, ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே இருந்தது. அது உண்மையாக இருக்கும்போது, எந்த ஒன்றைப் பற்றி பவுல் எண்ணிக்கொண்டிருந்தார் என நாம் தீர்மானிப்பது எப்படி? அது எளிது. நாம் செய்யவேண்டியதெல்லாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு திருப்பிக்கொண்டு, அங்கே பட்டியி-லிட்டிருக்கிற பல மனந்திரும் புதல் நிகழ்ச்சிகளைக் கவனிப்பதுதான். அவ்வாறு நாம் செய்யும்போது, அது ஒரு அடக்கம் என்றும், தண்ணீரில் செய்யப்படும் அடக்கம் என்றும், அது பாவங்களைக் கழுவுகிறது என்றும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக செய்யப்படுகிறது என்றும், கர்த்தரால் அது கட்டளையிடப்பட்டிருக்கிறது என்றும் நாம் கண்டுபிடிக்கிறோம் (அப். 8:27-39; அப். 22:16; அப்;. 2:38; அப். 10:48.).

திருமுழுக்குப் பற்றிக் கூறும் பல வசனப் பகுதிகள் வேதாகமத்தில் படிக்கும்போது, அதை பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பற்றிய காரியம் என்பதாக நினைத்து, கடந்து செல்கின்றனர். என்றாலும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு ஒரு போதும் கட்டளையிடப்படவில்லை என்பதை தயவு செய்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். காரியத்தை நீங்கள் படிக்கும்போது மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு விதி உண்டு. அதாவது, எந்த ஒரு முழுக்குப் பற்றி பேசப்படுகிறதோ அது தண்ணீர் திருமுழுக்கு இன்றி வேறு திருமுழுக்குப் பற்றிய குறிப்பாக இருப்பின் அது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு அல்லது

என்பதாக எப்போதுமே தெளிவாகச் யோவானின் திருமுழுக்கு என்ற வார்த்தை மட்டுமே சொல்லப்படுகிறது. என்றாலும், திருமுழுக்கு நடபடி 2:38, காணப்பட்டால், மாற்கு. 16:16; அப்போஸ்தலருடைய நடபடி 2:38, வசனங்களில் காணப்படுவது போல பின் அது தண்ணீர் திருமுழுக்கைப் பற்றிதான் கூறுகிறது என்று நீங்கள் எப்பொழுதுமே குறித்துக்கொள்ளலாம். எபேசியர் 4:5ம் வசனத்தில் பேசப்படும் ஒரு திருமுழுக்குக்கும் இது பொருந்தும்.

அடுத்து, தவறான காரியத்திற்காகவும் திருமுழுக்குப் பெறுவது சாத்தியம், என்பதை மனதில் வையுங்கள். உதாரணமாக, ஒருவர் இரட்சிக்கப்படக் கூடும், அதன்பின் அவர் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று பரவலாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. மீண்டும், ஒருவர் இரட்சிக்கப்பட்டால் ஒரு சபைக்குள் பிரவேசிக்கப்பட்ட அவர் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்த இரு நிகழ்ச்சிகளிலும் தவறான நோக்கத்திற்காக திருமுழுக்கு எடுக்கப்படுகிறது. ஒருவர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார் என்பதால் சுவிசேஷத்தின்படியாக திருமுழுக்குப் பெற இயலாது. ஏனெனில் சுவிசேஷத்தின்படியாக ஒருவர் திருமுழுக்குப் பெற்றிருக்காவிட்டால் அவர் இரட்சிக்கப்படுவதில்லை. அல்லது, சுவிசேஷத்திற்கு ஏற்ப திருமுழுக்குப் பெற்ற ஒருவரை அது ஒரு நாமகரண சபையில் சேர்க்காது. விபரமாக சொல்வதானால், திருமுழுக்குப் பெற்றிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பல மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். ஏனெனில் உண்மையில் அவர்கள் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை. ஒருவர் தண்ணீரில் முழுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் திருமுழுக்குப் பெற்றிருக்கிறார் என்பது அவசியம் இல்லை. சுவிசேஷத்தின்படியான ஒரு திருமுழுக்கு இருக்கிறது; வேதாகமத்தின் அந்த ஒரே திருமுழுக்கைப் பெற வேண்டுமானால் சரியான நோக்கத்திற்காக அது இருக்க வேண்டும். அது சரியான நோக்கத்திற்காக இல்லையென்றால் அது வேதாகமத்தின் ஒரே திருமுழுக்கு அல்ல. அது சரியான திருமுழுக்கு என எண்ணி நீங்கள் ஏமாந்து போக வேண்டாம். இப்படிப்பட்ட நிலையில், அத்தனி மனிதன் மீண்டுமாக தண்ணீரில் முழுக்கப்பட வேண்டும். அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்பதற்காக அல்ல, ஆனால் அவன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்கே. அதன் பின்னர் மட்டுமே சுவிசேஷத்தின் ஒரே திருமுழுக்கை அவன் பெற்றவனாக இருப்பான். இப்போது நாம் சுவிசேஷத்தின் படியான திருமுழுக்கிற்கான நோக்கத்தைப் பற்றி கவனிப்போம்.

1. விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை செய்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரட்சிக்கப்பட ஒருவர் திருமுழுக்குப் பெற வேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு. 16:16) என கிறிஸ்துவே கூறினார். இரட்சிப்பை, திருமுழுக்குக்குப் பின்னால் கிறிஸ்து வைத்திருக்கிறார்; இரட்சிப்பு திருமுழுக்குக்கு முன்பு அல்ல. ஒருவனை அழிக்க அவிசுவாசம் போதுமானது. ஆனால் இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் விசுவாசித்து திருமுழுக்குப் பெற வேண்டும். மீண்டும் பேதுரு எழுதினார்: "அதற்கு ஒப்பனையான

ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேதுரு. 3:21) "திருமுழுக்கு இரட்சிக்கிறதில்லை" என யார் சொல்லுவார்கள்?

2. பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டும். பேதுரு போதித்தார். "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38).

3. திருமுழுக்குப் பாவங்களைக் கழுவுகிறது. "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16) என பவுலுக்குச் சொல்லப்பட்டது.

4. திருமுழுக்கு ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. ரோமர்களுக்கும் கலாத்தியர்க்கும் பவுல் எழுதுகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர். 6:3) "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசு பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கலா. 3:26, 27) திருமுழுக்குப் பெறுவதற்கு முன்பு, தான் இரட்சிக்கப் பட்டிருப்பதாக ஒருவர் உரிமை கோரினால், கிறிஸ்துவுக்கு வெளியே, இப்படியாக கிறிஸ்துவுக்குள் இல்லாமல், இரட்சிக்கப் பட்டிருப்பதாக அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார் என அதற்கு அர்த்தம். ஒரு தவறான கொள்கை, ஒருவருடைய நடவடிக்கைகளால் இப்படித்தான் அறிக்கை செய்ய வழிநடத்தும்.

5. திருமுழுக்கு ஒருவரை சபைக்குள் கொண்டுவருகிறது. "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்" (1 கொரி. 12:13). சரீரம் என்பது இங்கு சபை (1 கொலோ. 1:18)ல் குறிப்பிடப்படுவது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு அல்ல, ஆனால் இது தண்ணீர் திருமுழுக்கு ஆகும். ஒருவர் சபைக்குக் கொண்டுவர பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு ஒரு போதும் கொடுக்கப்பட வில்லை. மாறாக ஆவியின் வழி நடத்துதலால் அல்லது அதின் வழியாக, அதாவது வார்த்தையின் வழியாக அவர் செயல்படும் போது, அவர் சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் திருமுழுக்குப் பெறுகிறார்.

6. கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை திருமுழுக்கு படம்பிடித்துக் காட்டுகிறது. (1 கொரி. 15:1-4). கிறிஸ்து சிலுவையில் மரித்தது போல, பாவி தனது பாவங்களில் மரிக்கிறான். கிறிஸ்து ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது போல, தண்ணீர் திருமுழுக்கில்

அவன் அடக்கம் செய்யப்படுகிறார். கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தது போல (ரோமர். 6:1-12) கர்த்தரில் அவன் ஒரு புது மனிதனாக எழுப்பப்படுகிறான் (2 கொரி. 5:17)

7. திருமுழுக்கு புதிய பிறப்பைக் கொண்டு வருகிறது.. கிறிஸ்து சொன்னார் "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான. 3:5) இது ஆவியின் திருமுழுக்கு அல்ல; தண்ணீரின் திருமுழுக்குத்தான் இங்கு குறிக்கப்படுகிறது. வார்த்தையின் வழியாக ஆவிகிரியை செய்யும்போது நாம் ஆவியின் வழி நடத்துதலின் மூலம் இராஜ்யத்தில் அல்லது சபையில் பிரவேசிக்க திருமுழுக்குப் பெற நாம் கற்றுத்தரப்படுகிறோம். மீண்டும், படியுங்கள்: 2 கொரி 5:17; 1 பேதுரு. 1:21, 22. திருமுழுக்கு மட்டுமே இரட்சிப்பதில்லை. ஆனால் இரட்சிக்கப்பட ஒருவர் திருமுழுக்குப் பெற்றிருக்க வேண்டும். சுவிசேஷத்தின் பிரகாரம் நீங்கள் திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா! இல்லையெனில், திருமுழுக்கு பெற முயற்சியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

J. C. Choate. தமிழில் எஸ். எஸ். ராஜன்.

> விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்...(மாற். 16:16.)

## ஏப்ரல் மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | J. மேரி எலிசபெத் கலைவாணி | - | வத்தலக்குண்டு |
| 2. | மேரியம்மாள் | - | வத்தலக்குண்டு |
| 3. | G. அன்னலட்சுமி | - | கன்னியாகுமரி |
| 4. | K. இளங்கோவன் | - | B. கோமரபாளையம் |
| 5. | S. சாராள் | - | B. கோமரபாளையம் |
| 6. | P. ஏசையன்ராஜ் | - | புதுப்பாளையம் |
| 7. | S. மணிமேகலை சேகர் | - | B. கோமரபாளையம் |
| 8. | M. சேகர் | - | மோதுப்பட்டி |
| 9. | S. ரூத் | - | G. கல்லுப்பட்டி |
| 10. | P. இளங்கோவன் | - | நிமிந்தப்பட்டி |
| 11. | G. நேசமணிவேதா | - | மதுரை |

## ஏப்ரல் மாத இதழின் விடைகள்

1. அருவருப்பாயிருக்கும் - ஆதி. 43:32.
2. ஐம்பதாம் வருஷம் - லேவி. 25:11.
3. மிகுந்த சந்தோஷம் - லூக். 15:7.
4. உயிரோடே செத்தவள் - 1 தீமோ. 5:6.
5. வெளிச்சமாயிருக்கிறீர்கள் - எபே. 5:8.
6. தரிசிக்கலாகாது.
7. எலிசா.
8. இயேசுகிறிஸ்து.
9. தேவனை.
10. கோபமூட்டாதிருங்கள்.



# Who Am I ?
# நான் யார்

1. நான் ஊத்ஸ் தேசத்திலே ஒரு செல்வந்தனாக இருந்தவன்.
2. துயரம் என்னை மேற்கொண்டது.
3. தேவன் என் சத்துருவாக மாறிவிட்டார் என நினைத்தேன்.
4. நான் மூச்சுவிட எனக்கு அவர் இடங்கொடார் என்றேன்.
5. உண்மையிலே பிசாசு தான் என்னுடைய எல்லா கஷ்டங்களுக்கும் காரணமாக இருந்தாலும், அவனது செயலைக் குறித்து நான் எச்சரிக்கப்பட்டதாக வேதத்தில் எந்த அடையாளமும் சுட்டிக்காட்டப்பட வில்லை.
6. என் மனைவி "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும்" என்றாள்.
7. "ஓ! நான் அவரை எங்கே கண்டு அறிவேன். அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து, என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்" என்றேன்.
8. பல கேள்விகளுக்குப் பதிலளிக்கும்படி தேவனால் உத்தரவிடப்பட்டேன். ஆனால் அவைகளில் ஒன்றுகூட நான் அறியவில்லை.
9. எல்லாவற்றையும் இழந்தேன், முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிகமாகத் திரும்பப் பெற்றுக்கொண்டேன்.
10. என்னுடைய எல்லா உபத்திரவங்களுக்குப் பதிலாக நெடு நாளிருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தேன்.

Selected from
The Voice of Truth International Vol. 11

இவன் யார்?
விடை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும். (ஏசா. 61:7.)

MONTHLY MAGAZINE
Regd. No. 84661 - 92
Postal Regn. No. TN/DDL/19.

Edited by B. Arjunan on behalf
of Church of Christ
2.2.102-D/5, Rajan Nagar,
Batlagundu and Printed at
Bharathi Computer Offset Press
for Shanthi Printers Main Road,
Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 9-00 மணி

வியாழன் மாலை 6-45 மணி



கிறிஸ்துவின் சபை,
2.2.102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு-624202.
திண்டுக்கல் மாவட்டம்.
Phone (04543) 23278.

From
**WORD OF CHRIST,**
Post Box No. 5,
BATLAGUNDU - 624202.
S. India.

To